# உலகம் உய்ய உரை அருளிய ஆண்டாள்

16

**ச.நயன பிரீத்தி , ஜெ. கி. ஸோபிகா & திரு. வீ. கோபிநாத்**
**உளவியல் துறை**
**பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.**

**ஆய்வுச்சுருக்கம்:**

கடவுளின் நாமங்களை உச்சரிப்பதன் மூலம் ஆன்மா தனது அசல் ஆன்மீக அறிவை மீண்டும் எழுப்பி, இந்த வாழ்க்கையில் அமைதியாக வாழ்ந்து, மரணத்தின் போது ஆன்மீக மண்டலத்திற்கு அல்லது கவலை இல்லாத வைகுண்டத்திற்கு திரும்ப முடியும் என்று வைஷ்ணவர்கள் கற்பிக்கிறார்கள்.இதையே திருப்பாவையில், ஆண்டாள் , திருமாலின் மீது உள்ள அன்பை காட்டுவதாக வைஷ்ணவம் கூறுகிறது. இதன் மூலம் வைஷ்ணவம் தமிழுக்கு செய்த மகத்தான தொண்டைப் பற்றி அறியலாம்.

**ஆய்வின் நோக்கம்**:

வைணவ சமயம் தமிழ் வளர்ச்சிக்கு செய்த தொண்டைப்பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**கடவுச்சொற்கள்**:

வைணவம் - மார்கழித் திங்கள் - பாவை நோன்பு – ஆழ்வார்கள்- திருமால்- ஸ்ரீவில்லிபுத்தூர் விஷ்ணுசித்தர்

**முன்னுரை:**

முல்லை நில மக்களின் வாழ்க்கையில் நிலவிய மாயவனின் வழிபாட்டை

***"மாயோன் மேய காடுறை உலகமும்"***

என்று தொல்காப்பியர் தம் நூற்பா வழியில் வைணவத்தைக் கூறியுள்ளார். மேலும் சங்க இலக்கியங்களில் திருமாலின் சிறப்புகளை விளக்கும் அவதாரக்கதைகள் பற்றிய குறிப்புகள் பல பாடல்களில் காணப்படுகின்றன. வைணவ சமயத்தின் முதன்மைத் தெய்வமாகிய திருமாலைப் போற்றித் தமிழ்ச் செய்யுட்களால் பாடியவர்கள் ஆழ்வார்கள் ஆவர். அவர்களுள் ஒரே ஒரு பெண் ஆழ்வாராகிய ஆண்டாள் தமது திருப்பாவையில் திருமாலாகிய கண்ணனின் வரலாற்றைக் கூறியுள்ளமை பற்றி இக்கட்டுரை வழி அறியலாம்.


**வைணவம்:**

சமயம் என்பது தத்துவம் என்ற உயிருக்கு உடல் போன்றது என்பர் விவேகானந்தர். **வைணவ சமயம்** விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம். வைணவம் என்றும் வைஷ்ணவம் என்றும் அழைக்கப்படும் இச்சமயம் இந்து சமயத்தின் ஆறு உட்பிரிவுகளுள் ஒன்றாகும். புராண காலத்திலேயே தொடங்கிய ஸ்ரீவைணவம் ஆழ்வார்கள் காலத்து பாசுரங்களின் பெருமை பெற்றது. உலகில் தீமைகள் ஓங்கும் போது காக்கும் கடவுளான விஷ்ணு, மனித வடிவில் அவதாரம் எடுத்து அவற்றை அழித்து நல்லவரைக் காப்பார் என்பது வைணவர் நம்பிக்கை. வைணவக் கடவுளான விஷ்ணு எண்ணற்ற

அவதாரங்கள் எடுத்துள்ளதாகவும் நம்புகிறார்கள். திருமாலின் எண்ணற்ற அவதாரங்களில் குறிப்பிடத்தக்கவையான மச்சம் , கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்ற பத்து அவதாரங்கள் தசாவதாரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. வைணவ சமயத்தில் ஸ்ரீவைணவம், மாத்வ சம்பிரயாதம், கௌடிய வைணவம், வர்க்காரி, சுவாமிநாராயண் சம்பிரதாயம், ஹரே கிருஷ்ணா இயக்கம் எனப்பல பிரிவுகள் உள்ளன. ஸ்ரீவைணவத்தில் வடகலை, தென்கலை என இரண்டு பிரிவுகள் உண்டு.

**ஆண்டாள்:**

ஆண்டாள், திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு பாடற் தொகுதிகளை இயற்றியுள்ளார்.வைணவ சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு, இறைவன் மீது இவர் கொண்டிருந்த காதலை விளக்கும் வித்தியாசமான ஒரு வரலாறாகும்.திருமாலின் மனைவியாகும் பாக்கியம் செய்தவள். ஸ்ரீ வில்லிபுத்தூர் நந்தவனத்தில் ஒரு துளசி செடியின் அடியில் ஆடி மாதம் பூரம் நட்சத்திரத்தில் மகாலட்சுமியே ஆண்டாளாக அவதாரம் செய்தார். பெரியாழ்வார் இந்த நந்தவனத்திற்கு வந்தபோது, ஆண்டாளை எடுத்து சுரும்பார் குழற்கோதை என்ற பெயரிட்டு வளர்த்து வந்தார். அந்த நந்தவனத்தின்



மலர்களை தினமும் பறித்து மாலையாக தொடுத்து திருமாலுக்கு வழங்குவது ஆழ்வாரின் முக்கியப்பணியாகும். இளம் வயதிலேயே சமயம், தமிழ் என்பன தொடர்பில் தனக்குத் தெரிந்த அனைத்தையுமே விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) கோதைக்குச் சொல்லிக் கொடுத்தார். இதனால் கோதை, இளம் வயதிலேயே கண்ணன் மீது மிகுந்த பக்தியுணர்வு கொண்டவராயும், தமிழில் நல்ல திறமை கொண்டவராகவும் இருந்தார். சிறு வயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற அன்பு காரணமாக அவனையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்துக்கொண்டார். தன்னைக் கண்ணனின் மணப்பெண்ணாக நினைத்துப் பாவனை செய்துவந்தார். கோயிலில் இறைவனுக்கு அணிவிப்பதற்காக விஷ்ணுசித்தர் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளை ஒவ்வொரு நாளும் அவருக்குத் தெரியாமல் தான் அணிந்து கண்ணனுக்கு ஏற்றவளாக தானிருக்கிறோமா என்று கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து பின்னர் திரும்பவும் கொண்டுபோய் வைத்துவந்தார். இதனால் கோதை சூடிய மாலைகளே இறைவனுக்கும் சூடப்பட்டன. ஒருமுறை பெருமாள் அணிந்திருந்த மாலையில் நீண்ட முடி இருப்பதை கண்ட அர்ச்சகர்கள் அதை எறிந்து விட்டு வேறுமாலை கொண்டு வரும்படி ஆழ்வாரிடம் கூறிவிட்டனர். பகவானின் சேவையில் தவறு வந்து விட்டதே என்று ஆழ்வார்


வருந்தினார். மறுநாளும் மாலை தொடுத்து ஆண்டவனுக்கு அனுப்பும் சமயத்தில், அந்த மாலையை ஆண்டாள் அணிவதை கண்டார். ஆண்டாளை கண்டித்தார். அன்று இரவே பெருமாள் ஆழ்வாரின் கனவில் தோன்றி, ஆண்டாள் சூடிய மாலையையே தனக்கு அணிவிக்கும்படி கூறினார். அது முதல் ஆண்டாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் பூமாலை மட்டுமின்றி பாமாலையும் சூடி மகிழ்ந்தாள்.

**திருப்பாவை:**

இலக்கியப் பரப்பில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றினாலும் தனித்தன்மை மிக்கதாய் மதிக்கப்படுவது ஆண்டாளினுடைய திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும். பெண்மையின் உணர்வுகள், எண்ணங்கள், மனத்தவிப்பு, ஆற்றாமையை அழகாக ஆண்டாள் வெளிப்படுத்தி இருப்பாள். திருப்பாவை பன்னிரண்டு வைணவ ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் ஆகும். வைணவப் பக்தி நூல்களில் திருமாலின் அருளையும், அன்பையும் பெற்றுத் தரும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் முதல் ஆயிரத்தில் 474 தொடக்கம் 503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவைப் பாடல்கள் ஆகும். இந்த பாடல்கள் ஆண்டாள் பாசுரம் என்றும் வழங்கப்படும். இந்த திருப்பாவை பாடல்கள் அனைவராலும் மார்கழி மாதத்தில் தினமும் பாடப்படும் முக்கிய பாடல்களாகும்.

**திருப்பாவையின் சிறப்பு:**

*'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'* என்றார் மகாகவி பாரதியார். அவர் விருப்பத்திற்கு ஏற்ப திருப்பாவை பாடல்கள் நம் நாட்டைத் தாண்டி வெளிநாடுகளிலும் ஒலிக்கின்றன. குறிப்பாக தாய்லாந்தில் இன்றும் திருப்பாவைபாடப்படுவது ஆச்சரியம் தருகிறது. மன்னர் முடிசூட்டு விழாவிலும் திருப்பாவை பாடப்படுகிறது. தாய்லாந்து அரசு பல நூற்றாண்டாக த்ரியெம்பாவ த்ரிபாவ' விழாவைக் கொண்டாடுகிறது. உண்மையில் அது 'திருவெம்பாவை திருப்பாவை' விழா. அப்பாடல்களை சொற்களின் உருவம் சிதைந்து மந்திரமாக அவர்கள் பாடுகிறார்கள்.




கவிஞர் கண்ணதாசன் ஆண்டாளை பற்றி ஏராளமான பாடல்களை எழுதியுள்ளார். அதிலும் திருமணக்கோலத்தில் இருக்கும் நாயகியை பாடும் பல வரிகளில் கோதை வர்ணனை இருக்கும். 'டீச்சரம்மா' என்ற திரைப்படத்தில் ஆண்டாள் மாலை என்பதை ஒரு காதல் முக்கோணத்தில் அருமையாகபயன்படுத்தி இருப்பார்.


*"சூடிக் கொடுத்தவள் நான் தோழி*
*சூட்டிக் கொண்டவளே நீ வாழி!*
*பாடிக் கொடுத்தவள் நான் தோழி*

*பாட்டை முடித்தவள் நீ வாழி"*

தோழிகள் இருவரும் நாயகன் மேல் காதல் கொள்ள, ஒரு பெண் விட்டுக் கொடுக்கும் காட்சி அமைப்பில் கண்ணதாசனின் வரிகள் அன்றைய நாளில் சிறப்பாக பேசப்பட்டது.

*"நான் ஒரு ஆண்டாளோ திருப்பாவை பாட"* என கதாநாயகியின் எண்ணத்தை பாடலாக உருவாக்கியிருப்பார் கவிஞர் வாலி.

கடல் கடந்து, மலை கடந்து வெளிநாட்டிலும் திருப்பாவை பாடப்படுவதால் மற்ற ஆழ்வார்களுக்கு இல்லாத சிறப்பு ஆண்டாளுக்கு மட்டுமே இருக்கிறது. திருப்பதியில் தினமும் அதிகாலையில் சுப்ரபாதம் சேவை நடப்பது வழக்கம். ஆனால் மார்கழி மாதம்' முழுவதும் அதிகாலையில் ஆண்டாளின் திருப்பாவை பாடப்படுகிறது. மேலும், ஆண்டாள் வேண்டிக் கொண்டபடியே இன்றைக்கும் திருப்பதியில் புரட்டாசி பிரம்மோற்ஸவத்தின் போது கருட சேவையன்று ஸ்ரீவில்லிபுத்துாரில் இருந்து ஆண்டாளின் பூமாலை, பட்டு, கிளி ஆகியவை திருப்பதி பெருமாளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. ஆண்டாளின் மாலை மரியாதையை ஏற்றதோடு, பெருமாளுக்கு அணிவித்த பட்டு, மாலை, இரு வெண்குடைகள் ஸ்ரீவில்லிபுத்துாருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.



**பாவை நோன்பு:**

கண்ணனைக் கணவனாக அடைய நினைத்த ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்துாரை ஆயர்பாடியாகவும், தன்னைக் கோபிகையாகவும் பாவித்து நோன்பு நோற்றாள். மாதங்களில் புனிதமான மாதமாகிய மார்கழியில் அதிகாலையில் துயில் எழுந்து, தன் தோழியர்களையும் அழைத்துக் கொண்டு நீராடி, கண்ணனைப் பாடி அருள் பெற அழைக்கிறாள்.

*'மார்கழித் திங்கள்'* எனத் தொடங்கிப் *'படிந்தேலோ ரெம்பாவாய்'* என்று முடியும் இத் திருப்பாவையில் அமைந்துள்ள முதல் பாசுரத்தின் ஒவ்வோர் அடியும் எண்ண ஊட்டல் சக்தி நிறைந்த தொடர்களாகும். *"நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"* என்னும் தொடர் *"பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்"* என்று முடிகின்றது. பொழுது விடிவதற்கு முந்திய அதிகாலையைப் 'பிரம்ம முகூர்த்தம்' என்பர். தூய அமைதியான அந்த விடியல் வேளையில் மார்கழிப் பனி நீராடித் தொழுது நாராயணனிடம் பறை கேட்டு நோன்பு நோற்க இள மகளிர் எல்லாரையும் திரட்டிச் செல்லும் இனிய நிகழ்ச்சியினை இப்பாடல் குறிக்கின்றது.

**நோன்பின் முறை:**

*வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்*
*செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்*
*பையத்துயின்ற பரமன் அடிபாடி*
*நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
*மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
*செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்*
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
*உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.*

இப்பாசுரமானது நோன்பு நோற்பதற்கு மேற்கொண்டுள்ள நியமங்களைத் தெரிவிக்கிறது. எந்த விசேஷ காரியத்தில் ஈடுபடுவோரும் அக்காரியம் கைகூடும் வரையில் சிலவற்றை விட வேண்டும் என்றும், சிலவற்றைப் பற்ற வேண்டும் என்றும் நியமம் கொள்வதுண்டு. அப்படியே இங்கே பெண்களும் சில நியமங்கள்ளைச் சங்கற்பித்துக் கொள்கிறார்கள்..

நெய் உண்ணக்கூடாது, பால் குடிக்கக்கூடாது. அதிகாலையே நீராடி விட வேண்டும். கண்ணில் மை தீட்டக்கூடாது. கூந்தலில் மலர் சூடக்கூடாது (மார்கழியில் பூக்கும் மலர்கள் அனைத்தும் மாலவனுக்கே சொந்தம்). தீய செயல்களை மனதாலும் நினைக்கக்கூடாது. தீய சொற்களை சொல்வது கூட பாவம் என்பதால் பிறரைப் பற்றி கோள் சொல்லக்கூடாது. இல்லாதவர்களுக்கும், துறவிகளுக்கும், ஞானிகளுக்கும் அவர்கள் போதும் என்று சொல்லுமளவு தர்மம் செய்ய வேண்டும்

**நோன்பின் பலன்:**

*ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி*
*நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்*
*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
*ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள*
*பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப*
*தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி*
*வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்*
*நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.*

பாவை நோன்பு செய்வதால் ஏற்படும் பயனை விவரிப்பதே இப்பாசுரத்தின் முக்கியமான செய்தி. இதில் வாமனாவதாரம் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. வாமனாவதாரத்தின் நோக்கமே வரமும், உரமும் கொண்ட மஹாபலி சக்கரவர்த்தியின் கர்வத்தையடக்குவதாகும். பாவை நோன்பு செய்வதால், உலகம் முழுவதும் மாதம் மும்முறை மழை பெய்யஉம். மழை காரணமாக வயல்களில் செந்நெல் செழித்து வளரும்; மீன்கள் வயலுக்குள் பாய்ந்தோடி மகிழும். குவளை மலர்களில் புள்ளிகளையுடைய வண்டுகள் தேன் குடிக்க வந்து கிறங்கிக் கிடக்கும். வள்ளல் போன்ற பசுக்கள் பாலை நிரம்பத்தரும். என்றும்

வற்றாத செல்வத்தை இந்த விரதம் தரும்.

மாதம் மும்மாரி என்பது ஒன்பது நாள் வெயிலும் ஒரு நாள் மழையுமாக மூன்று முறை பெய்வதாகும். அந்தணர்க்கு ஓர் மழை, ஆநிரைக்கு ஓர் மழை, கற்புடைப்பெண்டிர்க்கு ஓர் மழை என்று விசேட அர்த்தமும் உண்டு. வானம் வறண்டால் பூமி வறண்டு போகும். பூமி வறண்டால் மக்கள் வாடுவர், இதனால் வானவர்க்கு வழிபாடு அரிதாகும், உலகம் இருண்டு விடும் என்பதால் உலகம் செழிக்கவும், அதனால் பூஜைகள் சிறக்கவும் மழைவளம் வேண்டி இப் பாசுரத்தினால் பிரார்த்திக்கின்றார்கள்.

**முடிவுரை:**

*"ஐயைந்தும் ஐந்தும் அறியா மானிடரை வையம் சுமப்பது வம்பு"* என்னும் வைணவ கருத்து, திருப்பாவையின் ஏற்றத்தினை எடுத்துரைக்கிறது.

வைணர்களுக்கு வாய்த்த திருப்பாவை கார் உள்ள வரை, கடல் நீர் உள்ள வரை, வான் உள்ள வரை, வளியுள்ளவரை, மண் உள்ள வரை, நெருப்புள்ள வரை, இவ்வுலகில் நின்று வாழும் நேர்த்தி மிக்க பாடல்களாகும். தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும், இவ்விரு நூல்களின் பாடல்களைப் பாராயணமாகப் பாடி உய்ய வேண்டும். அகத்தில் உள்ள 'ஸர்வபூததமனி' என்னும் ஆன்ம சக்தி எழுப்பப்படுகிறது.அதிகாலையில் பிரம முகூர்த்த வேலையில் எழுந்து நீராடுவதால் நேர்மறை ஆற்றலும் புத்துணர்ச்சியும், நோன்பு மேற்கொள்வதால் புலனடக்கமும் சுயகட்டுப்பாடும் மேம்படுகிறது. கடவுளின் அருள் இருந்தால் எதை வேண்டுமானாலும் அடையலாம். அதற்கு அப்பழுக்கற்ற பக்தி அவசியம் என்பதை ஆண்டாள் வரலாறு உணர்த்துகிறது. ஆண்டாளின் அற்புதமான வரலாற்றை தினமும் படிப்பவர், கேட்பவர் எல்லா நலன்களையும் பெற்று மகிழ்வர்.

**துணை நூற்பட்டியல் :**

1. திருப்பாவை" (சங்கத் தமிழ் மாலை முப்பது), ஸ்ரீ.எஸ் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் - ஆசிரியர் ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம், அநுராகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை-600017. முதல்பதிப்பு-2003.
2. https://archive.org/details/aandhalthiruppavaivilakkam/page/n43/mode/2up
3. தொல்காப்பியம் - பொருளதிகாரம்- அகத்திணை இயல்-பாடல் எண்:5
4. ஆண்டாலும் அற்புதங்களும் – பத்தித்தொடர். ஆன்மிக மலர், தொகுப்பாசிரியர் பவித்ரா நந்தகுமார். தினமலர்
5. https://keetru.com/index.php/2009-10-07-10-44-25/2011-sp-41283151/17598-2011-11-30-03-20-32
6. https://aanmeegam.co.in/blogs/arthamulla-aanmeegam/margazhi-month-history/
7. https://youtu.be/JOKcGhaE1Zc?si=5GE9bHotlggj3UZ1
8. https://youtu.be/snpv2mUgxnA?si=4t3JxIMDRzMCIZ3L